**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. I**

**DINDIGUL.**

**C.C.No. 841/2023**

**Prosecution Witness : 2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **இந்தியன்** | **Caste** | : | |
| **Father's Name** | : | தங்கப்பாண்டியன் | **Calling** | : | **சுயதொழில்** |
| **Village** | : | **திண்டுக்கல்** | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | **23** |
| | | | **Dated** | : | **29.10.2025.** |

**29.10.2025.**

இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

பட்டியல் சாட்சி 3– திரு. **இந்தியன்** ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு அ.சா. 2 ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

**<u>எதிரி ஆஜர்</u>**

1. நான் திண்டுக்கல் குடியிருந்து சொந்தமாக தொழில் செய்து செய்து வருகிறேன். அ.சா.1 மதுமிதா எனது அக்கா. இவ்வழக்கு சம்பவத்தில் இறந்த கண்மனி ராஜன் எனது அண்ணன். கடந்த 05.06.2023 ம் தேதி எனது அக்கா மதுமிதா மாலை சுமார் 5.30 மணிக்கு எனக்கு போன் செய்து

எனது அண்ணன் கண்மனிராஜனுக்கு நல்லாம்பட்டி சச்சின் டீகடை அருகே விபத்து நடந்ததாக தகவல் சொன்னார். தகவல் கேள்விபட்டு நான் சம்பவ இடம் சென்று பார்த்தபோது, எனது நெஞ்சில் உமைகாயம்பட்டும், காலில் சீராய்ப்பு காயம் பட்டும் கிடந்தார், அவரிடம் சம்பவம் பற்றி விசாரித்த போது அவர் பிளாட்டினா இருசக்கர வாகனத்தில் திண்டுக்கல் – நல்லாம் பட்டி ரோட்டில் தெற்கிருந்து வடக்கு நோக்கி வந்து கொண்டிருந்ததாகவவும் அவருக்கு எதிர் திசையில் வடக்கிருந்து தெற்கு நோக்கி வேகமாகவும் ஆரன் அடிக்காமலும் வந்த ஆட்டோ அவர் மீது மோதியதாக சொன்னார். அதில் அவருக்கு நெஞ்சில் ஊமைக்காயமும், காலில் சீராய்ப்பு காயமும் ஏற்பட்டதாக சொன்னார். நெஞ்சு வலிப்பதாக சொன்னார். உடனே நான் அருகே இருந்த ஆட்டோவில் அவரை திண்டுக்கல் அரசு மருத்துமணைக்கு அழைத்து சென்றேன். மறுநாள் காலை எனது அக்கா மதுமிதா வந்துவிட்டார். பதற்றத்தில் நாங்கள் புகார் கொடுக்காமல் விட்டுவிட்டோம். 08 ம் தேதி காலை எனது அக்கா மதுமிதாவும் அண்ணன் குமரேசனும் புகார் கொடுத்தார்கள். அன்றைய தினம் 11 மணிக்கு எனது அண்ணன் சிசிச்சை பலனின்றி இறந்து விட்டார்.

போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பில் வாய்ப்பு வழங்கப்பட்டு குறுக்கு விசாரணை–இல்லை</u>

<u>நீதிமன்ற கேள்வி</u>

விபத்து ஏற்படுத்திய வாகனம் மற்றும் அதன் பதிவு எண் மற்றும் விபத்து ஏற்படுத்திய நபர் குறித்து நேரடியாக தெரியுமா என்றால் தெரியாது. ஆட்டோ மோதியதாகவும் வரதராஜன் என்பவர் ஆட்டோ ஓட்டியதாகவும் சொன்னார்கள். வரதராஜனை தெரியாது.

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

PACKIARAJ Digitally signed by PACKIARAJ Date: 2025.10.29 16:12:25 +0530

Judicial Magistrate No.I

Dindigul.